**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,** சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.6/2025**

**IN**

**அசல் வழக்கு எண்.343/2015**

மகாராஜன் ....மனுதாரர்/3 ம் பிரதிவாதி

/எதிர்/

1. செல்வராஜ் ...1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. கனித்தாய் (எ) கனியம்மாள் ....2 ம் எதிர்மனுதாரர்/7 ம் பிரதிவாதி

இம்மனுவானது 24.07.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தமிழரசன் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கிளாஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151–ன் கீழ், அசல் வழக்கில் 31.03.2016 ம் தேதிய வாய்தாவில் மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:03:23 +0530

உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/வாதி பிராது தபசில் சொத்தில் இரண்டில் ஒரு பங்கு பாகத்தை நயமிதம் பார்த்து, தரம் பார்த்து பிரித்து பிரிந்த பாகத்தை எதிர்மனுதாரர் வசம் தனித்து சுவாதீனம் கொடுக்க கோரி மேற்படி அசல் வழக்கை மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன்படி அசல் வழக்கில் 31.03.2016ம் தேதிய வாய்தாவில் மனுதாரர் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டி இந்நீதிமன்றத்தில் மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றும், அன்றைய தினத்தில் மனுதாரரின் நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்துவிட்டதினால் தங்களால் அன்றைய தினத்தில் இந்நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும், அதன்பிறகு மனுதாரர் வேலை நிமித்தமாக கேரளா மாநிலத்திற்கும், வெளியூர்களுக்கும் சென்றுவிட்டதால் தன்னால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விபரம் கூறமுடியாமல் போய்விட்டது என்றும், இந்நிலையில், கேரளாவிலிருந்து சங்கரன்கோவிலுக்கு வந்து அசல் வழக்கு குறித்து விபரம் கேட்டபோது, தனது வழக்கறிஞர் அசல் வழக்கின் நிலை குறித்து வளைதளத்தில் பார்த்தபோது 31.03.2016ம் தேதியில் தன்னை முறையாக கூவி அழைத்தும் தான் இந்நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகாத காரணத்தினால் மேற்படி அசல் வழக்கில் தனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தன்னிடம் விபரம் கூறினார் என்றும், மேற்படி தேதிய வாய்தாவில் தான் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாதது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமானது என்றும், எனவே அசல் வழக்கில் 31.03.2016ம் தேதிய வாய்தாவில் தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மேற்படி அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து திரும்ப விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:03:30 +0530

நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், இவ்வழக்கு விசாரணையை காலம்கடந்த வேண்டுமென்ற கெட்ட எண்ணம் தனக்கு சிறிதளவும் கிடையாது என்றும், இவ்வழக்கை மேல்நடத்தி போக தான் எப்பொழுதும் தயாராய் இருந்து வருவதாகவும், இவ்வழக்கில் தனக்கு நல்ல கட்சியுள்ளதாக சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது என்றும், இத்துடன் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளதாகவும், ஆகையால் அசல் வழக்கில் 31.03.2016 ம் தேதிய வாய்தாவில் மனுதாரர்/3 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**-

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரரை வீண் கஷ்ட, நஷ்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடனே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள விஷயங்கள் அனைத்தும் உண்மைக்கும், நியாயத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பாகவே இருக்கிறது என்றும், இதில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற விஷயங்களை எதிர்மனுதாரரால் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், அவற்றை மனுதாரரே இந்நீதிமன்றத்தில் ஐயமின்றி நிரூபித்துப்போக கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் 7 ம் எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து கொண்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரரின் மனு பொய்யானது, மோசடியானது என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:03:42 +0530

3) **<u>2ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>**-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் உறவினர் இறந்துவிட்டார் என்று அபிடவிட்டில் கூறியுள்ள காரணங்கள் பொய்யானதாகும் என்றும், இறந்துபோன உறவினர் பெயரோ, உறவு முறையோ, எந்த தேதியில் உறவினர் இறந்தார் என்றோ மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மனுதாரர் வேலை நிமித்தம் கேரளா சென்றுள்ளதாக பொய்யாக பிரஸ்தாபித்துள்ளார் என்றும், மனுதாரர் கேரளா மாநிலத்தில் எந்த ஊரில், என்ன வேலை செய்து வந்தார் என்றும், 2016 தேதியில் கேரளா சென்ற மனுதாரர் எந்த தேதியில் சொந்த ஊருக்கு வந்தார் என்றும், எந்த தேதியில் சங்கரன்கோவில் உள்ள வழக்கறிஞரை சந்தித்தார் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றும், மனுதாரரின் வழக்கறிஞர் வலைதளத்தில் பார்வையிட்டு 31.03.2016ல் மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார் என்று கூறியுள்ளது பொய்யானது என்றும், ஏனெனில் இவ்வழக்கின் நிலையை 2019ம் ஆண்டு தான் இந்நீதிமன்றம் தனது வலைதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளது என்றும், மனுதாரர்கள் வழக்கின் விசாரணையை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு ஆதரவாக பொய்யான காரணங்களை கூறி 8 ஆண்டுகள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மற்ற பிரதிவாதிகளை எதிர்மனுதாரர்களாக இம்மனுவில் காட்டாது மனுதாரரை மட்டும் எதிர்மனுதாரராக காட்டி தாக்கல் செய்துள்ளது செல்லக்கூடியதில்லை என்றும், இவ்வழக்கில் வா.சா.1 சாட்சியாக 28.02.2024 தேதியில் விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்கள் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டு, 26.06.2024 தேதியில் கூடுதலாக வா.சா.ஆ.5 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, வா.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா ஏற்பட்ட நிலையில், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்து வழக்கு விசாரணையை காலதாமதம் செய்து வருகிறார் என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்கக்கூடியதில்லை

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.08.02 17:03:51 +0530

என்றும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிட்டால் வழக்கின் போக்கும் திசைமாற்றம் அடைந்து, எதிர்மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடக்கூடியதாக இருக்கிறது என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர்/7ம் பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

5) மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

6) இம்மனுவானது மனுதாரர்/3ம் பிரதிவாதியால், அசல் வழக்கில் 31.03.2016ம் தேதிய வாய்தாவில் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) இம்மனுவின் மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் 31.03.2016ம் தேதிய வாய்தாவில் மனுதாரர் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டி இந்நீதிமன்றத்தில் மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றும், அன்றைய தினத்தில் மனுதாரரின் நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்துவிட்டதினால் தங்களால் அன்றைய தினத்தில் இந்நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும், அதன்பிறகு மனுதாரர் வேலை நிமித்தமாக கேரளா மாநிலத்திற்கும், வெளியூர்களுக்கும் சென்றுவிட்டதால் தன்னால் தனது வழக்கறிஞரை

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:03:59
+0530

சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விபரம் கூறமுடியாமல் போய்விட்டது என்றும், இந்நிலையில், கேரளாவிலிருந்து சங்கரன்கோவிலுக்கு வந்து அசல் வழக்கு குறித்து விபரம் கேட்டபோது, தனது வழக்கறிஞர் அசல் வழக்கின் நிலை குறித்து வளைதளத்தில் பார்த்தபோது 31.03.2016 ம் தேதியில் தன்னை முறையாக கூவி அழைத்தும் தான் இந்நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகாத காரணத்தினால் மேற்படி அசல் வழக்கில் தனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தன்னிடம் விபரம் கூறினார் என்றும், மேற்படி தேதிய வாய்தாவில் தான் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாதது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) ஆனால் மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

9) மேலும், மனுதாரின் இம்மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அசல் வழக்கில் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு அசல் வழக்கில் மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதால் இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:04:07 +0530

**10) இறுதியாக**

இம்மனுவானது ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) நிபந்தனை செலவத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/– மற்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/– (மொத்தம் ரூ.2000/–) நேரடியாக 14.08.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 14.08.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:04:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :–

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.02 17:04:20 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.06/2025
in
O.S.No.343/2015
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் :** 02.08.2025